Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 289

வெள்ளிக்கிழமை
12 செப்ரெம்பர் 2025

ஆவணி 27 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

**வீதிகளில் உலர்ந்த வலைகளை கைப்பற்றியது மன். நகரசபை**

விரிவு பக்கம்:- 02



விஜேராமவிலிருந்து வெளியேற முன்

## சீனத் தூதுவர் ஷென்ஹொங் மஹிந்தவைச் சந்தித்துப் பேச்சு

### குட்டையைக் குழப்புகிறதா சீனா?

கொழும்பு, செப். 12
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறுவதற்கு முன்னர் அவரை இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் ஷென்ஹொங் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தி


11

### பெரும் பரபரப்புக்கு மத்தியில்

# அரசமாளிகையிலிருந்து வெளியேறினார் மஹிந்த!

கொழும்பு, செப்ரெம்பர் 12
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, கொழும்பு விஜேராம மாவத்தையிலுள்ள அரசமாளிகையில் இருந்து நேற்று வெளியேறினார்.

11



## அரசமாளிகையில் இருந்து மைத்திரியும் வெளியேறினார்



கொழும்பு, செப். 12
முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அரசமாளிகையில் இருந்து வெளியேறியுள்ள விடயம் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற்குரிய சட்டம் இயற்றுவதற்கு முன்னதாகவே கொழும்பில்

11

## கஞ்சா கலந்த மாவா; கைதானார் இளைஞர்

யாழ்ப்பாணம், செப். 12
யாழ்ப்பாணம் - மடத்தடிப் பகுதியில் கஞ்சா கலந்த மாவாவுடன் இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைதுசெய்யப்பட்ட இளைஞர் 18 வயதுடையவர். அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன.
யாழ்ப்பாணம் மாவட்ட

11

## 9/11 தாக்குதல் தினத்தன்று வெளியேற்றப்பட்ட மஹிந்த!

### அமெரிக்காவையும் வளைக்கிறது பெரமுன

கொழும்பு, செப். 12
இலங்கையில் பயங்கரவாதத்தை இல்லாதொழித்த தலைவர், அமெரிக்காவில் இரட்டைக் கோபுர தாக்குதல் நடந்த நாளில் கொழும்பை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார் என்று பொதுஜன பெரமுனவின் ஊடகப் பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமன்ன தெரிவித்தார்.

11



## ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

கொழும்பு, செப். 12
யாழ்ப்பாணம் - இணுவில் பகுதியில் வைத்து ஹெரோய்னுடன்நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 110 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்

11

## ஈஸ்டர் தாக்குதல்களுக்கு அரசாங்கம் நீதி வழங்காது

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 12
உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் விசாரணைகளை மூடி மறைப்பதற்கே தற்போதைய அரசாங்கம் முயல்கின்றது. இந்த அரசாங்கம் நீதி வழங்கும் என்ற நம்பிக்கை எமக்கில்லை என்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ஹெக்டர் அப்புஹாமி தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பிள்ளையானை சிறையில் அடைத்துவிட்டு விசாரணைகளை மேற்கொள்

11

## வாள்வெட்டுத் தாக்குதல்; ஒருவருக்குப் படுகாயம்!

### குரும்பசிட்டியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 12
குரும்சிட்டி - தெல்லிப்பளை மருத்துவமனை வீதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் நபரொருவர் படுகாயமடைந்தார்.
மூன்று மோட்டார்சைக்கிளில் வந்த ஆறு பேரைக் கொண்ட குழுவினரே இந்த வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ள

11

**முச்சந்தி முரளி**

'பிச்சைக்காரன் புண்ணைக் காட்டி உழைக்கிறமாதிரி இவையும் வீட்டை விட்டுக்கலைச்சதை வைச்சு லாபம் பாக்கப் போயினம் கண்டியளோ'

### பாதுகாப்புப் பிரதி அமைச்சருக்கு எதிரான

## நம்பிக்கையில்லாப் பிரேரணையை விசாரணைக்கு எடுப்பது அவசியம்!

### எதிர்க்கட்சிகள் நேற்று அமளி

கொழும்பு, செப். 12
பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுக்குமாறு வலியுறுத்தி, நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நேற்றுப் பெரும் அமளியில் ஈடுபட்டன.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30

11

## பிக்குவுக்குச் சிலையமைக்க வவுனியாவில் இடம் தருக!

### வவுனியா மாநகரசபையில் கோரிக்கை

வவுனியா, செப். 12
பௌத்த துறவி ஒருவருக்கு சிலையொன்றை அமைக்க இடம்தருமாறு, வவுனியா மாநகரசபையில் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.
வவுனியா மாநகரசபையின் மாதாந்த அமர்வு, தவிசாளர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன் போதே, பௌத்த துறவியொருவருக்குச் சிலை அமைப்பதற்காக இடமொன்றை வழங்குமாறு மாநகரசபை உறுப்பினர் லலித் ஜெயசேகர

11

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 11.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4191 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 05 10 26 30 |
| விசேட எழுத்து | B |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 11.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1258 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 20 21 34 54 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 11.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0217 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கங்கள் | 4 1 2 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 11.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2297 |
| ஆங்கில எழுத்து | Q |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 12 22 25 54 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 11.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5949 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 9 7 0 2 4 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 11.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1979 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 14 38 52 64 |
| விசேட எழுத்து | Q |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 11.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0524 |
| ஆங்கில எழுத்து | E |
| வெற்றி இலக்கங்கள் | 0 2 4 9 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 11.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0065 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 35 36 45 48 |

### ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையை

# நுணுக்கமாகக் கையாளாவிட்டால் எதிர்காலத்தில் சிக்கல் தோன்றும்!

## பேராசிரியர் பிரதீபா மஹாநாம எச்சரிக்கை

**கொழும்பு, செப்.12**

**ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இந்தக் கூட்டத்தொடர் இலங்கைக்கு மிக முக்கியமானது. அரசாங்கம் இதை நுணுக்கமாக அணுகவேண்டும் என்று பேராசிரியர் பிரதீபா மஹாநாம தெரிவித்துள்ளார். கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

2010ஆம் ஆண்டிலிருந்து இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் பிரேரணைகளை நிறைவுக்குக் கொண்டுவராவிட்டால் அவற்றை இணைத்து ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்திலும், பின்னர் பாதுகாப்புச்சபையிலும் சமர்ப்பிக்கும் அபாயம் இருக்கின்றது. இது மிகவும் பாரதூரமானது. பாதுகாப்புச் சபைக்கூட்டத்தில் இந்தப் பிரேரணைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படாவிட்டால் பல்வேறு தடைகள் இலங்கைக்கு விதிக்கப்படக்கூடும்.

இந்தமுறை இலங்கை தொடர்பில் முன்வைக்கப்படவுள்ள பிரேரணை தொடர்பான வரைவொன்று வெளிவிவகார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதில் இலங்கை செய்யவேண்டியவை தொடர்பில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் பிரதானமானது புதிய பிரேரணைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கவேண்டும் என்பதாகும். இலங்கை அரசாங்கம் அதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளமை சிறந்ததாகும்.

ஆயினும் பிரதான சவால்களை நாம் எதிர்கொள்ளவேண்டியுள்ளது. அவற்றில் முதலாவது ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்பதாகும். அதில் கையெழுத்திட்டால் இராணுவத்தினர் எவரும் வெளிநாடுகளுக்குச் செல்லமுடியாது. இரண்டாவது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு நாம் இணக்கம் தெரிவித்திருக்கின்றோம். அதற்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் 77 அங்கத்துவ நாடுகள் உள்ளன. அவற்றில் குறைந்தபட்சம் 24 நாடுகளின் ஆதரவைப் பெற்றால் போதுமானது. அதற்கான சாதகமான சூழல் எமக்கு காணப்படுகிறது. இதில் கால அவகாசத்தை கோருவதைவிட முறையான நீண்டகால வேலைத்திட்ட இவற்றைவிட முக்கியமானது இந்தியாவின் நிலைப்பாடாகும். இந்தியா, இலங்கைக்கு சாதகமாக தீர்மானத்தை எடுக்கும் பட்சத்தில் அதிகளவான நாடுகளின் ஆதரவைப் பெறமுடியும் - என்றார். (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 11.09.2025 | வியாழக்கிழமை | 0657 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| A | 4 2 7 5 5 5 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.09.2025 | வியாழக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2923 | L | 01 12 26 46 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.09.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 33 48 52 80 | 5084 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 11.09.2025 | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0767 | 15 18 25 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.09.2025 | வியாழக்கிழமை | |
| விருச்சிகம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♏ | 09 19 42 58 | 4635 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 11.09.2025 | வியாழக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| L | 22 | 09 22 68 74 | 2099 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 11.09.2025 | வியாழக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 24 26 36 51 | 2749 |

## நிமலராஜன் படுகொலை விசாரணை அறிக்கை விநியோகம்

வவுனியா, செப்.12

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கை வவுனியாவில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட் டுள்ளது. வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்கள் அவற்றைப் பொதுமக்களுக்கு விநியோகித்தனர். வவுனியா இலுப்பையடிப் பகுதியில் வைத்து பொதுமக்கள், வர்த்தகர்கள், சாரதிகள் ஆகியோருக்கு இந்த அறிக்கை விநியோகிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் நிமலராஜன் கொலை வழக்கின் விசாரணை அறிக்கை மற்றும் கொல்லப்பட்ட, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்தொடர்பான தகவல்கள் உள்ளடங்கியுள்ளன. (எ-25-இ)

## வீதிகளில் உலரவிடப்பட்ட வலைகளை கையகப்படுத்திய மன்னார் நகரசபை


மன்னார், செப்.12

மன்னார் நகரசபை எல்லைக்குள் வீதிகளிலும், பொது இடங்களிலும் உலரவிடப்பட்டிருந்த மீன்பிடி வலைகளை மன்னார் நகரசபை ஊழியர்கள் நேற்றுமுன்தினம் கையகப்படுத்தியுள்ளனர்.

மக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும்வகையில் சில மீனவர்கள் பிரதான வீதிகளிலும், உள்ளக வீதிகளிலும் வலைகளை உலரவிட்டுள்ளனர். அதனால் துர்நாற்றம் வீசுவதுடன், விபத்துகளும் ஏற்பட்டுவருகின்றன.

இதுதொடர்பில்கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைவாக, முதற்கட்டமாக ஜிம்றோன் நகர் மற்றும் எமில் நகர்ப் பகுதிகளில் உலரவிடப்பட்டிருந்த வலைகள் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டன.

போக்குவரத்துக்கும், மக்களின் நடமாட்டத்துக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஏனைய பகுதிகளிலும் வலைகள் உலரவிடப்பட்டிருந்தால் உரிமையாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-213)





## வடிகால்கள் சுத்தப்படுத்தும் திட்டம் மன்னாரில் ஆரம்பம்

மன்னார், செப்.12

மன்னார் நகரசபை எல்லைக்குள் நீண்டகாலமாகத் துப்புரவு செய்யப்படாமல் உரிய பராமரிப்பின்றிக் கழிவுகளால் நிரம்பியுள்ள பிரதான வாய்க்கால்களைச் சுத்தப்படுத்தும் பணி நேற்று வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மழைக்காலத்தில் மன்னார் நகர்ப்பகுதிக்குள் ஏற்படும் வெள்ளப்பாதிப்புகளை குறைக்கும்முகமாக நகரசபை ஊழியர்கள் மற்றும் நகரசபை உறுப்பினர்கள், நகரசபை சுகாதார உத்தியோகஸ்தர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்த மாத இறுதிவரை நடைபெறவுள்ள இந்தச்செயற்பாட்டுக்காகவும், வடிகால்கள் பராமரிப்புக்காகவும் மன்னார் நகரசபை 20 இலட்சம்ரூபா நிதி ஒதுக்கியுள்ளது. (எ-25-21-35-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தமிழ் டயஸ்போராக்களுக்காக மஹிந்தவின் மாளிகை பறிப்பு!

## புரளியைக் கிளப்புகிறார் சரத் வீரசேகர

**கொழும்பு, செப்.12**
**பிரிவினைவாதத் தமிழ் டயஸ்போராக்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அரச மாளிகையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

மஹிந்த ராஜபக்சவை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
மஹிந்த ராஜபக்சவை அரச மாளிகையில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கையில் பிரிவினைவாதத் தமிழ் டயஸ்போராக்களே திருப்தியடைவார்கள். அவர்களுக்கே இன்றைய நாள் மகிழ்ச்சியைத் தரும் நாளாகும். அவர்களைத் திருப்திப்படுத்துவதற்கான நடவடிக்கையாகவே இது அமைந்துள்ளது. மஹிந்த ராஜபக்ச என்பவர் சாதாரண நபர் கிடையாது. முழு உலகமுமே தோற்கடிக்க முடியாது எனக் கூறிய புலிகள் அமைப்பைத் தோற்கடித்து 30 வருடகாலப் போரை முடிவுக்கு கொண்டுவந்தவர். மக்களுக்கு வாழும் உரிமையை வழங்கிய தலைவர் அவர் .நாட்டில் அபிவிருத்திகளை ஏற்படுத்தினார். இப்படிப்பட்ட தலைவருக்கு இவ்வாறா நன்றிக்கடன் செலுத்துவது-என்றார். (எ-44)

# நேபாளத்தைப் போன்று இலங்கையும் மாறலாம்

## எச்சரிக்கின்றது ஐ.ம.சக்தி



நேபாளத்தில் வெடித்த கலவரத்தைப்போன்று, இலங்கையிலும் அரசுக்கு எதிராக இளைஞர்கள் கிளர்ந்தெழும் நாள் வெகுதொலைவில் இல்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் .
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
நேபாளத்தில் இலங்கையில் அரகலயவின்போது நடைபெற்ற சம்பவங்களே முதலில் காண்பிக்கப்படுகின்றன. ஜனாதிபதி மாளிகை கையகப்படுத்தப்பட்டமை, அங்கு அரங்கேற்றப்பட்ட சம்பவங்கள், நீச்சல் தடாகத்தில் குளித்தமை, ஜனாதிபதியின் கட்டிலில் படுத்தமை போன்ற நாட்டை நாசமாக்கிய காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.
என்றாவது ஒருநாள் மக்கள் அதற்கு எதிராகத் திரும்பி, உங்களைத் (தேசிய மக்கள் சக்தியினரை) தாக்குவார்கள். அந்தக் காலம் வரும்போது உங்கள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களைத்தான் முதலில் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். எமக்குப் பிரச்சினை இல்லை. நாம் எதற்கும் தயார். இன்று இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கின்றனர். பட்டதாரிகளுக்கும் வேலை இல்லை. எனவே அவர்கள் கிளர்ந்தெழுவார்கள். அதற்குரிய நாள் தொலைவில் இல்லை - என்றார். (எ-44)

# கம்மன்பிலவைக் காப்பாற்ற அவரது கட்சி பிரயத்தனம்!

## மொட்டுக் கட்சியிடம் சரண்

கொழும்பு, செப்.12
அரசியல் பழிவாங்கலுக்காகவே நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் உதய கம்மன்பிலவைக் கைதுசெய்ய அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதற்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையவேண்டும் என்று பிவிதுறு ஹெல உறுமயக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
பிவிதுறு ஹெல உறுமயக் கட்சியின் செயலாளர் உட்பட உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் மற்றும் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச ஆகியோரைச் சந்தித்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.
விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சோடிக்கப்பட்ட சாட்சியை அடிப்படையாகக் கொண்டு கடற்படையின் முன்னாள் தளபதி நிஷாந்த உலுகேதென்ன கைது செய்யப்பட்டார் என்று உதய கம்மன்பில ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்தில் எந்தவொரு இனத்தையும் அவர் குறிப்பிடவில்லை. அரசமைப்பின் 14(1) இல் அளிக்கப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்துக்கு அமைவாகவே அவர் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.
உரிய காரணிகள் ஏதுமின்றி சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சமவாயச்சட்டத்தின் பிரகாரம் உதய கம்மன்பில கைதுசெய்யப்பட்டாரெனில் பிணை பெற்றுக்கொள்வது கடினமானதாக அமையும். அதனால் அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையவேண்டும் என்று வலியுறுத்துகிறோம் என்று அந்தக்கட்சி கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ-இ)

# எல்ல வீதி வளைவில் பாதுகாப்பு அரண்!

பதுளை, செப்.12
பதுளை - எல்ல வீதியின் ஆபத்தான வளைவில் மண் அணையொன்று நிர்மாணிக்கப்பட்டு பாதுகாப்பு அரண் உருவாக்கப்பட்டுள்ளது.
எல்ல வீதியில் ஐந்தாம் மைல் போஸ்ட் அருகே உள்ள ஆபத்தான வளைவில் கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்ற பஸ் விபத்தில் 15 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.
இந்த ஆபத்தான வளைவில் பல்வேறு விபத்துகள், அனர்த்தங்கள் இடம்பெற்றிருந்தன. அதைக் கருத்தில் கொண்டு இனிவரும் காலங்களில் விபத்துகள் ஏற்படுவதைத் தடுக்கும்வகையில் தற்போது மண் நிரப்பி பாதுகாப்பு அரண் உருவாக்கப்பட்டுள்ளது. (எ-25-இ)

## ஆடிப்பாடாமல் ஓடிச் செய்வினமோ?

**வெ**ள்ளம் வரமுதல் அணை கட்டோனும். அணை மட்டுமில்லை றோட்டுகளும் வெள்ளத்துக்கு முதல் போடோனும். ஆனால் இலங்கையில றோட்டுப்போடுற ஒப்பந்தகாரர் எல்லாரும் மழைக்கு கிட்டவாத்தான் வேலையைத் தொடங்குவினம். அப்பதான் மழையில இவ்வளவு சேதாரம் எண்டு கணக்கை மாத்திக் காட்டலாம். ஆனால் இவையின்ர லாபத்துக்காக அந்த றோட்டு மழை வெள்ளத்துக்க இருக்கிறதைவிட சீரழிஞ்சு சனம் போய்வரமுடியாதளவுக்கு மாறிடும். யாழ்ப்பாணத்தில இருந்து காரைநகர் போற றோட்டை இப்பிடித் திருத்துறம் எண்டு ஒப்பந்தகாரர் சீரழிச்சதால, சனங்கள் றோட்டில வாழைமரம் நட்டு, நெல்லு விதைச்சுப் போராடின பிறகுதான் ஒருமாதிரி அதைத் திருத்தினவை. இப்ப என்னத்துக்கு அந்தப் பழங்கதை? காரணம் இருக்கு.

வல்லிபுரக்கோயில் கொடியேறப்போகுது. அந்தக் கோயில் திருவிழாவின்ர உச்சமே சமுத்திரத் தீர்த்தம்தான். அதுக்கு எல்லா இடத்திலயிருந்தும் சனங்கள் அள்ளுப்பட்டுச் சமுத்திரம்மாதிரி வருவினம். தீர்த்தமாடுற கடற்கரையில எள்ளுப்போட்டால் விழ இடமில்லாத அளவுக்கு சனமா இருக்கும். இவ்வளவு சனமும் கோயில் பக்கத்தாலையும், கற்கோவளம் பக்கத்தாலையும்தான் கடற்கரைக்கு வந்துபோகலாம். அப்பிடிக் கோயிலில இருந்து கடற்கரைக்கு வாற தெண்டால், மணலுக்கால நடந்துதான் வரோனும். இல்லாட்டி அதுக்க குறுக்கமறுக்க ஓடுற டிராக்டர்ல ஏறி வரோனும். வெளியிடத்துக்காரர் எல்லாரும் பஸ், கார், ஹயஸ்,மோட்டர் சைக்கிள் எண்டு தங்கட வாகனங்களில கற்கோவளம் பக்கமாத்தான் வருவினம். அப்பிடி வரேக்க ஒரு றோட்டாலையே வந்து, அதே றோட்டாலையே திரும்பிப் போகேலாமல் அப்பிடியே இறுகிப்போய் நிப்பினம். நத்தையை விடவும் மெதுவா ஊர்ந்து ஊர்ந்து அந்த றோட்டைக் கடக்கவே மணித்தியாலக் கணக்காகிப் போடும்.

இப்பிடிப்பட்ட நிலைமையில அந்த ஒரேயொரு றோட்டையும் கிண்டிக்கிளறி, நடுவுக்க சல்லியைப் போட்டு, ரண்டு பக்கம் மண்ணால அணைமாதிரி உயர்த்திக்கட்டி அரைகுறைத்திருத்தத்தோட இருந்தால் எப்பிடி இருக்கும்? அதோட மாரியும் தொடங்கப் போகுது. மழையும் இடைக்கிடை பெய்தால், கிடங்கெல்லாம் வெள்ளக்காடாப் போடும். ஆனால் இதையெல்லாம் அந்த றோட்டுப்போடுறவை யோசிச்சதாத் தெரியேலை. புட்டுக்கு மண் சுமந்த பெருமானார் மாதிரி, ஆடிப்பாடி அலுப்பில்லாமல் அசைஞ்சு அசைஞ்சுதான் வேலையைக் கொண்டுபோகினம். சும்மாவே வல்லிபுரக் கோயில் கடல்தீர்த்தத்துக்கு சனங்கள் போய்வரக் கஷ்டப்படுற அந்த றோட்டை, இப்ப திருத்துறம் எண்டு சொல்லி இன்னும் கெடுத்து வைச்சிருந்தால் கட்டாயம் தீர்த்தத் திருவிழாவில பெரும் சிக்கல் வரலாம். அதால அந்த றோட்டு வேலையை ஆக்களைக் கூடப் போட்டெண்டாலும் தீர்த்தத்துக்குமுதல் முடிக்கோனும். இல்லாட்டி கற்கோவளம் றோட்டின்ர தொடக்கத்திலையே வாகனங்களை நிப்பாட்டி அதுக்கு அங்கால சனங்களை நடந்துபோகச் சொல்லோனும். பொறுப்பானவை இதைக் கவனத்தில எடுப்பினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும்.நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** தாய்மாமன்வழியில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**சிம்மம்:** அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். மாலையில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தருவதாக அமையும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படக்கூடும். பொறுமையுடன் இருப்பது நல்லது. பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**துலாம்:** காலையில் வழக்கமான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்தவும். பிற்பகலுக்கு மேல் புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**விருச்சிகம்:** வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். அலுவலகத்தில் பணிகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள்.

**தனுசு:** தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு என்பதால் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். வாழ்க்கைத்துணையுடன் உறவினர் வீடுகளுக்குச் சென்று வருவீர்கள். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**கும்பம்:** எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். தாய்மாமன்வகையில் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# பெரும்போகச் செய்கைக்குத் தயாராகும் விவசாயிகள்

யாழ்ப்பாணம், செப்.12

**யாழ்.மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தலில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.**

அநேகமான வயல்கள் உழுது சீர் செய்தும் மற்றும் பசளைகள் போட்டும் தயார்ப்படுத்தப்பட்டுவருகின்றன. கடந்த வாரத்தில் பருவகால மழை பெய்ததைப் பயன்படுத்தி பெரும்போக நெற்செய்கைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இந்தமுறை யாழ். மாவட்டத்தில் 12ஆயிரம் வரையிலான ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (எ-41-25-17)



கிளிநொச்சி உருத்திரபுரம் நீவில் குளத்துக்கு அருகில் 8 அல்லது 9 வயது மதிக்கத்தக்க யானைக்குட்டி ஒன்று நோய்வாய்ப்பட்டநிலையில் அவதானிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பிரதேச மக்கள் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். (எ-25,113)

## தேங்கியுள்ள தபால்களை விநியோகிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப்.12


தபால் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புறக்கணிப்பால் கொழும்பில் தேங்கியிருந்த வடக்குக்கான தபாற்பொதிகள் தற்போது வடக்குக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. தேங்கியுள்ள தபால்கள் தற்போது தரம் பிரிக்கப்பட்டு விநியோகிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ-41-17)

## பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இடமாற்றம்

வவுனியா, செப்.12

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய ஜெயக்கொடி, குருநாகல் மாவட்டத்துக்கு உடனடியாக நடைமுறைக்குவரும்வகையில் இடமாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக மாத்தளையில் கடமையாற்றிய பீ.எஸ்.றட்ரண நியமிக்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். (எ-25,110)



## மண்டுவிலில் சிக்கன்குனியா

சாவகச்சேரி, செப்.12

சாவகச்சேரி மண்டுவில் கிராம அலுவலர் பிரிவில் சிக்கன் குனியா நோயாளர் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். வீட்டுவளாகத்தில் காணப்படும் நுளம்பு பெருகும் இடங்களை உடனடியாக அழிக்க வேண்டும், காய்ச்சல் ஏற்பட்டால் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்வது அவசியம் என்று பொதுச் சுகாதார பரிசோதகர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த வாரம் வீடுகளில் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதால் மேற்கண்ட அறிவித்தல்களைக் கவனத்தில் எடுத்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-25,9)

# தொழில் முயற்சியாளர்களுக்கு வங்கிக்கடன் குறித்து விளக்கம்

யாழ்ப்பாணம், செப்.12

தொழில் முயற்சியாளர்கள் வங்கிக்கடன் பெற்றுக்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கான தீர்வு காணும் கலந்துரையாடல் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன் தலைமையில் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலில் யாழ்.மாவட்டச் செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், உதவித்திட்டமிடல் பணிப்பாளர், வங்கி முகாமையாளர்கள், தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள் [illegible] கலந்து கொண்டனர்.



தொழில் முயற்சியாளர்கள் வங்கிக் கடன்களைப் பெற்றுக் கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் வங்கிகளில் சிறுதொழில் முயற்சியாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கடன் திட்டங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்பட்டன. (எ-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

அறிவின்மை கேவலம். அதைவிடக் கேவலம் அதிக மனமின்மை.

– ஜேம்ஸ் ஆலன்–

# இனியும் வேகாது இனவாதப்பருப்பு

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான வரப்பிரசாதங்களை நீக்கும் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகள் இதுவரைகாலமும் அனுபவித்து வந்த சலுகைகள் இல்லாதுபோயிருக்கின்றன. அதன் ஓர் அங்கமாக முன்னாள் ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் தங்களின் அரச இல்லங்களில் இருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. நாட்டின் பொருளாதார நிலைமையில் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு பெருந்தொகை அரசநிதி செலவிடப்படுவது ஏற்புடையதல்ல என்ற நிலைப்பாட்டில் தற்போதைய அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்திருந்தபோதும், அது ஓர் அரசியல் பழிவாங்கல் என்பதாகவே முன்னாள் ஜனாதிபதிகளின் தரப்பில் இருந்து கருத்துகள் விதைக்கப்படுகின்றன.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகள் - வரப்பிரசாதங்கள் சாதாரணமானவை அல்ல. கடந்த ஆண்டில் மட்டும் முன்னாள் ஜனாதிபதிகளுக்காகச் செலவிடப்பட்ட நிதி 9 கோடி ரூபாவுக்கும் அதிகம் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். நாடு கடும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருந்த நிலையில், பொதுமக்கள் நாட்டின் முன்னேற்றத்துக்காகத் தங்களை வருத்திக்கொள்ளவேண்டும் என்று கூறுபவர்கள், முன்னாள் ஜனாதிபதி என்ற ரீதியில் நாட்டு மக்களின் பணத்தை ஏப்பமிடுவது ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. பெரும் சொத்துப்பத்துகளைக் கொண்டிருக்கும் முன்னாள் தலைவர்கள் - அரசியல்வாதிகள் தங்களின் வாழ்வைக் கொண்டு நகர்த்த அரசாங்கத்தின் வரப்பிரசாதங்கள் வேண்டும் என்று கோருவதும் நியாயமானதல்ல. ஆனால் தற்போதைய அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தின் பின்னால் உள்ள உண்மைகளை - நாட்டுக்குக் கிடைக்கும் நன்மைகளை- புறந்தள்ளி இந்த விடயத்தை அரசியலாக்கி ஆதாயம் தேடும் முயற்சியே முடுக்கி விடப்பட்டிருகின்றது.இந்த விடயத்தை அரசியலாக்கி - இழந்த மக்களின் ஆதரவைப் பெறுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர் ராஜபக்சக்கள். கடந்த காலங்களில் தங்களுக்கு எதிரான சந்தர்ப்பங்களில் இனவாதம், மதவாதம் என்பவற்றை முன்னிறுத்தி அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொண்ட ராஜபக்சக்கள், தற்போதும் இந்தச் சூழ்நிலையைத் தமக்குச் சாதகமாக்கி அதன்மூலம் அரசியல் ஆதாயம்தேட முயற்சிக்கின்றனர். அதனாலேயே இந்தச் சம்பவத்துடன் நடந்துமுடிந்த போரையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும் இணைத்து தெற்கு மக்களிடம் அனுதாபத்தைத் தேட முயற்சிக்கின்றனர். இனவாதம், புலிக்கதைகளைக் கூறித் தெற்கு மக்களைத் தங்கள் பக்கம் திருப்பி, தங்களின் அதிகாரக்கனவை நனவாக்கும் நப்பாசையுடனே ராஜபக்ச தரப்பு செயலாற்றுகின்றது.

ராஜபக்சக்களின் அரசியல் எப்போதுமே பயத்தையும் பிரிவினைவாதத்தையும் அடிப்படையாகக்கொண்டது. அதன்மூலம் ராஜபக்சக்கள் அதியுச்சப் பயனைப் பெற்றுக்கொண்டிருந்தாலும், அவர்களின் இந்த நாடக அரசியலே இலங்கை தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளுக்கும், சர்வதேச தனிமைக்கும் மூலகாரணம் என்பது யாவரும் அறிந்ததே. கடந்த காலங்களில் முன்னெடுத்த இவ்வாறான கடைநிலை அரசியலாலேயே செல்லாக்காசாகி வீட்டுக்குள் முடக்கப்பட்டிருக்கும் ராஜபக்சக்கள், இப்போதும் தங்களைத் திருத்திக்கொள்ளாது அந்தக் கடைநிலை அரசியலையே கையிலெடுத்திருக்கின்றார்கள். அதனாலே யே தெற்கு மக்களைக் கிளர்ச்சியூட்டுவதற்காக விடுத லைப்புலிகள், பிரபாகரன், போர்வெற்றி, வெற்றிநாயகன் என்ற பதங்களை அவர்கள் மீண்டும் கையிலெடுத்திருக்கின்றார்கள். இவ்வாறான போலி அரசியல் நாடகங் களின் பலனாகவே இலங்கை இன்று கையறு நிலைமையில் இருக்கின்றது என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இன, மத உணர்வுகளைத் தூண்டி, பழைய போர்களை அரசியலாக்கும் வஞ்சகங்களைநம்பி இனி மக்கள் ஏமாறக்கூடாது. நாட்டு மக்களின் விழிப்புணர்வே நாட்டின் மீட்சிக்கும், ஜனநாயகத்தின் வலிமைக்கும் அடித்தளமாக மாற்றமடையும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## நில நிர்வகிப்புத் தேசிய திட்டத்தை உருவாக்கக்கோரி மனுத்தாக்கல்!

*காணி அமைச்சருக்கு மன்று அழைப்பாணை*

**கொழும்பு, செப்.12**
**நாட்டின் நிலங்களை நிர்வகிக்க தேசியத் திட்டத்தை வெளியிட உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக, எதிர்வரும் நவம்பர் மாதம் 28ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று காணி அமைச்சர், சுற்றாடல் அமைச்சர் மற்றும் பல தரப்பினருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.**

சுற்றுச்சூழல் நீதி மையத்தால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் தம்மிக கணேபொல மற்றும் ஆதித்ய படபெந்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி ரவீந்திரன் தாபரே, நீதிமன்றத்தில் ஆதாரங்களைச் சமர்ப்பித்து, நாட்டில் நில முகாமைத்துவத்துக்கான தேசிய திட்டம் இல்லாததால் பல சிக்கல்கள் எழுந்துள்ளன என்று சுட்டிக்காட்டினார். விவசாய நடவடிக்கைகள், காடுகள், சதுப்பு நிலங்கள், குடியிருப்புகள் போன்றவற்றுக்கு ஒதுக்கப்படவேண்டிய நிலங்கள் மற்றும் அவற்றின் எல்லைகள் முறையாக அடையாளம் காணப்பட்டு ஒதுக்கப்படாததால் நாட்டில் பல சுற்றுச்சூழல் மற்றும் பிற நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். முன்வைக்கப்பட்ட வாதங்களைக் கருத்திற்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு, இந்த விவகாரத்தில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ள காணி அமைச்சர், சுற்றாடல் அமைச்சர் மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் தரப்பு வாதங்களை முன்வைப்பதற்கான அழைப்பாணை அனுப்பியுள்ளது. (எ-இ)



## பத்மேவுடன் தொடர்பு 'எஸ்.ஐ.' ஒருவர் கைது!

கொழும்பு, செப்.12
பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த கெஹெல்பத்தர பத்மேவுடன் தொடர்புவைத்திருந்த குற்றச்சாட்டில் கம்பஹா குற்றப்புலனாய்வுப் பிரிவில் பணியாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தோனேசியாவிலிருந்து நாடுகடத்தப்பட்ட பத்மே மற்றும் நான்கு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப் பிரமுகர்களுடன், இவர் தொடர்புகளைப் பேணியுள்ளார் என்று சந்தேகிக்கப்படுகிறது. இந்தநிலையில் பாதாள உலக வலையமைப்பில், சந்தேகநபரின் தொடர்பு எந்த அளவுக்கு உள்ளது என்பது தொடர்பில் குற்றப்புலனாய்வுத் துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-25.இ)

## முன்னாள் ஜனாதிபதிகளுக்கு கடந்த ஆண்டு செலவு 9 கோடி

கொழும்பு, செப்.12
கடந்த ஆண்டில் மட்டும் முன்னாள் ஜனாதிபதிகளுக்காக 9 கோடியே 85 இலட்சத்து 48 ஆயிரத்து 839 ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான வரப்பிரசாதங்களை நீக்கும் சட்டவரைவு நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த சலுகைகள் மற்றும் செலவினங்கள் அந்தச் சட்டத்தின் அடிப்படையில் இரத்துச்செய்யப்படவுள்ளன. (எ-இ)



## நீதித்துறையைச் சேர்ந்த 106 பேருக்கு இடமாற்றம்

நீதவான்கள், மாவட்ட நீதிபதிகள் உட்பட 106 நீதித்துறை உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். எதிர்வரும் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும்வகையில் நீதித்துறையுடன் தொடர்புடைய இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இந்த இடமாற்றங்கள் நீதவான்கள், மேலதிக நீதவான்கள், மாவட்ட நீதிபதிகள், மேலதிக மாவட்ட நீதிபதிகள் மற்றும் பதிவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
சனிக்கிழமை - ஆவணி 27
13.09.2025
சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம் : 01.35 - 03.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சிகள் அனைத்தும் விரைவில் ஒன்றிணையும்!

## ஐ.தே.க. நம்பிக்கை

கொழும்பு, செப்.12
எதிர்க்கட்சியில் இருக்கும் கட்சிகள் ஒன்றிணைந்து, எதிர்வரும் காலங்களில் கூட்டு எதிர்க்கட்சி ஒன்றை அமைத்துக்கொள்ளும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவர் ருவன் விஜேவர்த்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

பௌர்ணமி தினத்தை முன்னிட்டு, ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்ற தானசாலை நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் தற்போதைய நிலைமையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் இருந்தால் நாட்டுக்கு நல்லது என்றே நான் நினைக்கின்றேன். எனினும் அவர் இதுவரை முடிவெடுக்கவில்லை. அவர் நாடாளுமன்றத்துக்குச் செல்வதாக இருந்தால், சரியான நேரம் காலம் பார்த்துச் செல்வார்.

அதேவேளை கூட்டு எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்றுவருகின்றன. அந்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம்பெற்றுவருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியும் அதில் கலந்துகொண்டு, கூட்டாகச் செயற்படுவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கிவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு நிறைவு விழாவை ரணில் விக்கிரமசிங்கவின் உடல் ஆரோக்கியத்தைக் கருத்திற்கொண்டு, பிற்போடுவதற்குத் தீர்மானித்துள்ளோம். இதுதொடர்பில் இன்னும் ஓரிரு தினங்களில் இறுதிமுடிவு எடுக்கப்படும்- என்றார். (ஏ-இ)

# மோசடியாளர்களைக் காக்கவே எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவு!




## அமைச்சர் வசந்த சமரசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.12
**நாட்டில் ஊழல் மோசடியாளர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படுவதால், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்துள்ளன. இதனூடாக எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் அனைவரும் நண்பர்கள் என்பதை நாட்டு மக்கள் விளங்கிக்கொள்ளவேண்டும். இவர்கள் ஆட்சியில் இருந்தால், அவர்களின் நண்பர்களான ஊழல் மோசடியாளர்கள் அனைவரும் பாதுகாக்கப்படுவார்கள்.**

இவ்வாறு வர்த்தகத்துறை மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஊழல் மோசடிகளாலேயே இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்தது. மோசடியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது, அதை அரசியல் பழிவாங்கல்கள் என்று எவ்வாறு கூறமுடியும்? பாதாளக் குழுக்களின் முன்னிலைத் தரப்பினரைக் கைதுசெய்தவுடன் ஒருசில அரசியல்வாதிகள் கலக்கமடைந்துள்ளனர். அதையும் அரசியல் பழிவாங்கல் என்று எதிர்க்கட்சியினர் குறிப்பிடாமல் இருப்பது ஆச்சரியத்துக்குரியது. போதைப்பொருள் வியாபாரத்துக்கும், அரசியல்வாதிகளுக்கும் இடையில் தொடர்புள்ளது என்பதை நாட்டு மக்கள் வெகு விரைவில் உறுதியாக அறிந்துகொள்வார்கள்- என்றார். (ஏ-இ)



செம்மணி உள்ளிட்ட இனப்படுகொலைகளுக்கு நீதிவேண்டி தமிழ்க்கட்சிகள் முன்னெடுத்துவரும் கையெழுத்துப் போராட்டம் சமத்துவக்கட்சியின் செயலாளர் நாயகம் மு.சந்திரகுமார் தலைமையில் இறுதிநாளாக அண்மையில் கிளிநொச்சி கனகபுரம் வீதியில் முன்னெடுக்கப்பட்டது. (ச-41-113)

# குற்றவாளிகள் கைது விடயத்தில் அரசமைப்புத் திருத்தம் அவசியம்

## ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

கொழும்பு, செப்.12
இலங்கையில் இடம்பெறும் கைதுகளில் பெரும்பாலானவை அரசியல் கண்காட்சிக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் கலாசாரத்தை, அரசமைப்புத் திருத்தம் ஊடாக மாற்றவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

யாராவது ஒரு நபர் கைதுசெய்யப்பட்டால் அது தண்டனையாகக் கருதப்படுவதில்லை என்று அரசமைப்பில் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் இலங்கையில் யாராவது கைதுசெய்யப்பட்டால், தண்டனையாகக் கருதி, அவருக்குக் கைவிலங்கிட்டு, அரசியல் கண்காட்சி நடத்துவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தியா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின் அரசமைப்பில் இந்த உறுப்புரை இதைவிட மாற்றமானதாகும். ஜப்பானில் விசாரணை மேற்கொண்ட பின்னரே கைதுகள் இடம்பெறுகின்றன. அங்கு 100 பேரை விசாரணைக்கு அழைத்தால் 98 பேர் குற்றவாளியாகின்றனர். ஆனால் இலங்கையில் 100 பேரை விசாரணைக்கு அழைத்தால், 98 பேர் குற்றமற்றவர்களாக வீடு செல்கின்றனர். இந்தக் கலாசாரத்தை மாற்றுவதாக இருந்தால், அரசமைப்பின் உறுப்புரைகளில் திருத்தம் மேற்கொள்ளவேண்டும். விசாரணைகளைப் பலப்படுத்தவேண்டும். விசாரணை அறிக்கையின் பிரகாரமே நீதிமன்றம் செயற்படுகின்றது. இந்த விவகாரத்தில் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ஏ-இ)





# அரசியல் நோக்கத்துக்காகவே முன்னாள் உறுப்பினர் கைது!

## பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.12
அரசியல் நோக்கத்துடனே, போதைப்பொருள்களுக்கான இரசாயனங்களை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்கும் கட்சிக்கும் எவ்வித் தொடர்பும் கிடையாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அந்தப் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கட்சியில் இருந்து உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பதவி நீக்கப்பட்டுள்ளார். இவருக்கும், கட்சிக்கும் இடையில் எவ்வித் தொடர்பும் கிடையாது. நபர்களின் தனிப்பட்ட செயற்பாடுகளுக்குக் கட்சி பொறுப்புக்கூறமுடியாது.

அவ்வாறு பொறுப்புக்கூறவேண்டுமாயின் மக்கள் விடுதலை முன்னணியும் பொறுப்புக்கூற வேண்டும்.

ஏனெனில் தேசிய பட்டியல் உறுப்பினர் இப்ராஹிமின் இரண்டு மகன்மார்கள்தான் தற்கொலைக் குண்டுதாரிகளாக மாறி உயிர்த்த ஞாயிறுக் குண்டுத்தாக்குதல்களை நடத்தினார்கள்.

ஆகவே குறுகிய அரசியல் நோக்கத்துடன் செயற்படுவதை அரசாங்கம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் இதனைத் தனது முழுமையான அரசியலுக்காகப் பயன்படுத்திக்கொள்கின்றது- என்றார். (ஏ-இ)

# உயிர்வாழும் உரிமையை உறுதிசெய்க

## சஜித் வலியுறுத்து

கொழும்பு, செப்.12
நாட்டில் தற்போது தினந்தோறும் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிச்சூடுகள் நடத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இதனால் மக்களின் வாழ்க்கை பாதுகாப்பற்றதாக மாறியுள்ளது. அரசமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள மக்கள் உயிர்வாழ்வதற்கான உரிமையை உறுதிப்படுத்தவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

சமூகத்தில் அதிகரித்துவரும் இந்த வன்முறை, கொலைக் கலாசாரம் உடனடியாக தோற்கடிக்கப்படவேண்டும். அதுவே அரசாங்கத்தின் பொறுப்பாகும். அதற்கு அரசாங்கத்துக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

அரசாங்கம் கேட்க விரும்பாத விடயங்களை சமூகவலைத்தளச்செயற்பாட்டாளர்கள் கூறும்போது அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பது அரசாங்கத்தின் பணியல்ல. மாறாக அவர்கள் கூறுவதைக்கேட்டு தமது தவறுகளைத் திருத்திக்கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்லவேண்டும். ஊடகங்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் முன்னிற்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படைச் சட்டங்களை கல்வியில் இணையுங்கள்

## இலஞ்ச, ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் பரிந்துரை



**கொழும்பு, செப்.12**

**சட்டத்தை மதிக்கும் சமூகம் தோற்றம்பெற வேண்டுமானால், நாட்டு மக்கள் அனைவரும் சட்டம் தொடர்பில் முதலில் அறிந்துகொள்ளவேண்டும். அடிப்படைச் சட்டத்தைப் பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கினால் சிறந்த சமூகத்தை உருவாக்கமுடியும் என்று இலஞ்ச, ஊழல் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் தலைவர் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கைதுகள் தொடர்பில் தற்போது மாறுப்பட்ட பல கருத்துகள் குறிப்பிடப்படுகின்றன. நாட்டு மக்கள் அனைவரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவுசெய்கிறார்கள். 225 உறுப்பினர்கள் ஒட்டுமொத்த மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் சட்டத்தை இயற்றுகிறார்கள். ஆகவே மக்கள் தாம் தெரிவுசெய்யும் பிரதிநிதிகள் தொடர்பாகப் போதுமான தெளிவைப் பெற்றிருக்கவேண்டும்.

நாட்டின் சட்டம் தொடர்பில் பூரண தெளிவில்லாமல் மக்கள் தமக்கான பிரதிநிதிகளைத் தெரிவுசெய்தால் எதிர்பார்க்கும் மாற்றத்தை ஏற்படுத்தமுடியாது. அரசமைப்பு மற்றும் நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் சட்டம் தொடர்பில் முதலில் மக்கள் தெளிவுபெற வேண்டும்.

எமது காலச் சூழல் தற்போது கிடையாது. தற்போதைய இளம் தலைமுறையினர் மாறுப்பட்ட வகையில் உள்ளார்கள். அவர்களுக்குச் சட்டம் மற்றும் அடிப்படை விடயங்கள் தொடர்பாகப் போதுமான புரிதல் கிடையாது. குறைந்தபட்சம் அவர்கள் பத்திரிகைகூட வாசிப்பது கிடையாது. அடிப்படைச் சட்டத்தைப் பாடத்திட்டத்துக்குள் உள்ளடக்கினால் சிறந்த சமூகத்தை உருவாக்கலாம். தற்போதைய இளம் தலைமுறையினரின் எதிர்காலத்துக்காக சட்டத்தை அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

தமக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எவ்வாறு சட்டத்தின் ஊடாக காப்பீடு பெற்றுக்கொள்வது, எங்கு சென்று முறையிடுவது என்பது கூட பெரும்பாலானோருக்குத் தெரியாது. அதனால் அடிப்படைச் சட்டத்தை கல்விக் கட்டமைப்புக்குள் உள்ளடக்கவேண்டும். முதலில் சட்டத்தைக் கடுமையாகச் செயற்படுத்தவேண்டும் அதற்கு முதலில் சட்டத்தை பற்றி அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் - என்றார். (எ-இ)



# தேசியமட்ட கோலூன்றிப்பாய்தல் யாழ்.மாணவிகள் சாதனை

தேசியமட்ட சேர் ஜோன். ராபெற் தடகளப்போட்டிகளின் வரிசையில் 20 வயது பெண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த வீராங்கனை

ப.அபிசாளினி தங்கப்பதக்கத்தைத் தட்டிச்சென்றுள்ளார். இவர் 3.10 மீற்றர் தூரம் வரை பாய்ந்து இந்த சாதனையைப் புரிந்துள்ளார்.

இதேவேளை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வீராங்கனை யோ.நிருசா 3 மீற்றர் தூரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், வட்டுக்கோட்டை யாழ்ப்பா ணக் கல்லூரி வீராங்கனை ம.டர்சனா 2.90 மீற்றர் தூரம் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். (ச-25)

# தீர்வுகிடைக்காவிடில் வேலை நிறுத்தம்!

## மின்சாரசபை ஊழியர்கள் எச்சரிக்கை

கொழும்பு,செப்.12

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பது தொடர்பில் தொழிற்சங்கங்கள் முன்வைத்துள்ள பிரேரணைகள் தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தத் தவறுமானால், தற்போது ஆரம்பித்துள்ள சட்டப்படி வேலை செய்யும் நடவடிக்கை, வேலை நிறுத்தப் போராட்டம் வரை விரிவுபடுத்தப்படும் என்று மின்சாரசபையின் சுதந்திர சேவை சங்கத்தின் செயலாளர் பிரபாத் பிரியந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மின்சாரசபை மறுசீரமைப்புக்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை. ஆனால் அரசாங்கம் நீதிமன்றத் தீர்ப்புக்கு மாற்றமாகவே மறுசீரமைப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றனர். அதனாலே நாங்கள் எதிர்ப்புத் தெரிவித்துவருகின்றோம். இதுதொடர்பாக 25 தொழிற்சங்கங்கள் கைச்சாத்திட்டு, 24 கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளோம். எமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வைப் பெற்றுத்தரும்படி தெரிவித்து, நாங்கள், கடந்த 4 நாள்களுக்கு முன்னர் சட்டப்படி வேலைசெய்யும் போராட்டத்தை ஆரம்பித்தோம். ஆனால் எமது போராட்டம் தொடர்பில் அரசாங்கத் தரப்பில் இருந்து இதுவரை சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. எதிர்வரும் 16ஆம் திகதி எமது சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கு நாங்கள் செல்வோம். அதற்குப் பின்னர் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை நாள்களில் எமது அனைத்து காரியாலயங்களையும் மூடுவதற்குத் தீர்மானித்திருக்கின் றோம். எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் வரலாற்றில் ஒருபோதும் இடம்பெறாத தொழிற்சங்கப் போராட்டத்துக்கு நாங்கள் செல்வதற்கு வழி ஏற்படுத்த வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம். எமது கோரிக்கைக்குத் தீர்வு வழங்க அரசாங்கம் தவறினால், அரசாங்கத்துக்கே பாதிப்பு ஏற்படும் - என்றார். (ச-இ)


## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையின் குளிரூட்டி பாராமரிப்பு மற்றும் வாகன தூய்மைப்படுத்தல் சேவைக்கான கேள்வி கோரல் 2025-2026

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் சேவைக்கான முத்திரையிடப்பட்ட [illegible]ன்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்வி விபரம் | [illegible] | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|
| | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/04/45/DGH KOC/03/02/SA/25/AC | Maintenance & services of Air Conditioner – 104 Nos | Business Registration & CIDA Registration EM5 or above | 80,000.00 | 26.12.2025 |
| 02 | NP/04/45/DGH . KOC/03/02/SA/25/VS | Services Maintenance of Vehicles -5 Nos | Business Registration | 15,000.00 | 26.12.2025 |

1. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு. வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராக இருத்தல் வேண்டும் அத்துடன் அரசாங்க நிறுவனம் ஒன்றிற்கு இடையூறின்றி சேவை வழங்கியிருப்பதோடு மூன்று வருட அனுபவத்துடன் தரவு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகைமையினை பூர்த்தி செய்தல் வேண்டும்.
2. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை மாவட்ட பொது வைத்தியசாலை, யு9 வீதி ,கிளிநொச்சி எனும் இடத்திலிருந்து 12.09.2025 ஆம் திகதியிலிருந்து 25.09.2025 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 (வரிநீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
3. கேள்விகள் 26.09.2025 ம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொது வைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் பெறுகை இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் கேள்வி முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
4. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல0212285329 ,0212284111) எனும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கும் இப்பெறுகையினை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.
6. கேள்வி ஆவணமானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 நாட்கள் (28.11.2025) வரையும் செல்லுபடியாகும்.

கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் 17.09.2025 ஆந் திகதி பி.ப 14.30 மணிக்கு, மாவட்ட பொது வைத்தியசாலை கிளிநொச்சி எனும் முகவரியில் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெறும். இக்கலந்துரையாடலில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர் பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மீன்பிடி முறைகளுக்கு இந்த வருடத்துடன் முற்றாகத் தடை

## அமைச்சர்கள் உறுதி என ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

**முல்லைத்தீவு, செப்.12**

**வடக்கில் இந்த வருட இறுதிக்குள் சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகள் முற்றாகக்கட்டுப்படுத்தப்படும் என்று கடற்றொழில் அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் ஆகியோர் உறுதியளித்துள்ளனர் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில், இடம்பெற்ற கடற்றொழில் அமைச்சின் ஆலோசனைக்குழுக்கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.**

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடக்கு மாகாணக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் அத்துமீறி, சுமார் 18 வகையான சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் எமது மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. சட்டத்துக்கு ஏற்ப கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர். முக்கியமாக வெளிச்சம் பாய்ச்சி மீன்பிடித்தல், சுருக்குவலை, வெடிவைத்து மீன்பிடித்தல் உள்ளிட்ட சட்டவிரோத கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களால், பாரம்பரிய கரவலைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டினேன்.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பிரதி அமைச்சர் ரத்ன கமகே ஆகியோர், இந்திய மீனவர்களின் அத்துமீறல், சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகள் தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்தியுள்ளோம். எதிர்வரும் டிசெம்பர் மாதம் இறுதிக்குள் இவற்றை முற்றாகக் கட்டுப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். இதுதொடர்பில் கடற்படையினருடனும், பொலிஸாருடனும் கலந்துரையாடப்படும் என்று பதிலளித்தனர். - என்றார். (எ-246)

# கோயில் வீதியில் தற்காலிகத் தடை

யாழ்ப்பாணம், செப்.12

கோவில் வீதியில் சங்கிலியன் வீதிக்கு அண்மையாக நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக்கூடல் அமைப்பால் நல்லூரான் அலங்கார வளைவு அமைக்கப்படவுள்ள நிலையில், கட்டுமான நடவடிக்கைகளுக்காக பருத்தித்துறை வீதி கோவில் வீதி சந்தியிலும், கோவில் வீதி சங்கிலியன் வீதி சந்திக்கு அருகிலும் தற்காலிகமாக வீதித்தடை அமைக்கப்படவுள்ளது. இந்த வீதித் தடை எதிர்வரும் 18ஆம் திகதிமுதல் 28ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நல்லூர் மேற்கு வீதி வழியாக கோவில் வீதியைப் பயன்படுத்துவோர், நல்லூர் சிவன் கோவிலடியால் பாரதியார் சிலை சந்தியருகிலுள்ள புதிய திருநெல்வேலி வீதியூடாக (புது சிவன் வீதி) திருநெல்வேலி வீதியை அடைந்து (சிவன் வீதி) முடமாவடிச் சந்தியை அடைந்து கோவில் வீதியைப் பயன்படுத்தமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று முடமாவடிச் சந்தியூடாக கோவில் வீதியைப் பயன்படுத்தி நல்லூர் கோவிலை அடைவதற்கு சங்கிலியன் வீதி ஊடாக பருத்தித்துறை வீதியைப் பயன்படுத்தமுடியும் என்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை அறிவித்துள்ளது. (எ-25)

# நெடுந்தீவு வீட்டுத்திட்டம் பயனாளிகளுக்குக் கூட்டம்

நெடுந்தீவு, செப்.12

நெடுந்தீவுப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத்திட்டங்களின் பயனாளிகளுடனான கலந்துரையாடல் பிரதேசசெயலர் என்.பிரபாகரன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் பிரதேச செயலர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், திட்டமிடல் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வீட்டுத்திட்டப் பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-25,9)



### நீண்ட காலத்தின் பின்னர்

# தூர்வாரப்படும் கந்தரோடைக்குளம்

யாழ்ப்பாணம், செப்.12

கந்தரோடைக்குளத்தில் தூர்வாரும் பணிகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கந்தரோடைக்குளம் யாழ்ப்பாண மாவட்டத்தின் மிகப்பெரிய குளமாகும். வழுக்கையாற்றுப் படுக்கையில் 50 ஏக்கரில் நீரைத்தேக்கும் வாய்ப்பைக் கொண்டது. இந்தக் குளம் நீண்டகாலமாகத் தூர்வாரப்படாது இருந்தநிலையில், தற்போது வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் வழிகாட்டலில் கந்தரோடைக் கிராம அபிவிருத்திச் சங்கம், கந்தரோடை விவசாய சம்மேளனம் என்பன இணைந்து தூர்வாரும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன. (எ-25,66)

# நிரந்தரப் பொறிமுறையூடாக குளங்களைத் தூர்வாருங்கள்

## வடக்கு ஆளுநர் பணிப்புரை

யாழ்ப்பாணம், செப்.12

யாழ். மாவட்டத்திலுள்ள குளங்களைத் தொடர்ச்சியாகத் தூர்வாருவது தொடர்பில் பொறிமுறையை உருவாக்கி யாழ்ப்பாணத்தின் நிலத்தடி நீரைப் பாதுகாக்கும் செயன்முறையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

பரீட்சார்த்தமாகத் தூர்வாருதலை உடனடியாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன்னும் சில வாரங்களில் மழைக்காலம் ஆரம்பித்தால் இந்தப் பணிகளைத் தொடரமுடியாது. கந்தரோடைக் குளத்தைத் தூர்வாருவதற்கான அனுமதி வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்தால் உடனடியாக வழங்கப்படும். யாழ். மாவட்டத்தில் கமநல சேவைகள் திணைக்களத்தின் கீழேயே அதிகளவு குளங்கள் உள்ளன. அவற்றின் கீழ் தூர்வாருவதற்கு உடனடியாக அனுமதிகள்வழங்கக்கூடியவற்றுக்கு அனுமதி வழங்கித் தூர்வாருவதற்கான முன்னுரிமைப் பட்டியலைத் தயாரித்து தலைமையகத்துக்கு அனுப்புங்கள். வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளரின்கீழ், குளங்களைத் தூர்வாருதலுடன் தொடர்புடைய சகல திணைக்களங்களையும் ஒருங்கிணைத்து நிரந்தரப் பொறிமுறையை உருவாக்க வேண்டும் - என்றார். (ச-இ)

### புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

# தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

நி. பிரகீத் 172, இ.ஆரணன் 169, பி.சஸ்மிகா 168, ஜெ.நிரோஜன் 160, ந.கர்ஷனா 157, வி.அகரன் 155, ஜெ.புரந்தரன் 153, ந.அஷ்விகா 153, சு.துபிசனந் 150, தி.கஜசங்கவி 148, சி.அபிஷனா 147, ற.ஷாத்மிகா 145, டி.கர்ஷன் 144, சி.டரணியா 143, ப.பொன்னுமையாள் 143, க.டர்மிகன் 142, கோ.துஷானி 142, பி.ஜீவிகா 141, யூ.யகிர்னிகா லெம்பேட் 140, து.தியஷ்வினி 139, அ.ரிஸ்மிதா 138, ச.கேசவி 138, ஜெ.திகழ்ஜா 137, ச.டிரானியா 137, ச.மதுமிலன் 136, செ.பவிசாந் 136, மு.சஜிமீர் முகம்மத் 135, ஜெ. ஜெஅஸ்வின் 135, வி.அபிராமன் 134, சு.தர்ஷித் 133, தீ.அனாமிகா 133, அ.டினுஸ்கா 132, இ.கோவர்த்தன் 132. (ச-25)



சுன்னாகம் றோட்டரிக் கழகத்தினரால் சாவகச்சேரி சகதி அம்மன் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்விகற்கும் மாணவர்களுக்கு பாதணிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ச-25,9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நுண்நீர்ப்பாசனத்தில் பயிரிடப்பட்ட கத்தரிச்செய்கை அறுவடை விழா

கிளிநொச்சி, செப்.12

யாழ். பல்கலைக்கழக விவசாயபீட சமுதாய மேம்பாட்டுக்குழுவின் ஏற்பாட்டில், தானியங்கி நுண்நீர்ப்பாசனத்தில் வெற்றிகரமாகச் செய்கை பண்ணப்பட்ட கத்தரிச்செய்கை அறுவடை விழா கிளிநொச்சி திருவையாறு கோவிப்பிரியன் விவசாயி வயலில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

விவசாய பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன், சிறப்பு விருந்தினர்களாகக் ஜப்பான் பல்கலைக்கழக பேராசிரியர் ரோறு ரமிர்ஸ்னாகா, இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் சி.சிவமோகன், விரிவுரையாளர்கள் ,விவசாய பீடப் பண்ணை முகாமையாளர், கிராமசேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,113)

# அரச ஊழியர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப்.12

அரச உத்தியோகத்தர்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு யாழ்.மாவட்ட மேலதிக செயலர் கை.சிவகரன் தலைமையில் மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி கொழும்பு எட்வேட் ஹென்றி பேதிரிஸ் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-25,66)



தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் சர்வதேச எழுத்தறிவு தின விழிப்புணர்வுக் கருத்தரங்கு கெற்பேலி முன்பள்ளியில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. (ச-25,9)







# பருத்தித்துறைப் பிரதேச பண்பாட்டுப் பெருவிழா

யாழ்ப்பாணம், செப்.12

வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறைப் பிரதேச செயலகம், பிரதேச செயலகக் கலாசாரப் பேரவை ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் பண்பாட்டுப் பெருவிழா பருத்தித்துறை சூரியமஹால் திருமண மண்டபத்தின் கலாபூஷணம் இளையமுத்து துரைமுத்து அரங்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ந. திருலிங்கநாதன் தலைமையில் நடைபெற்ற விழாவில் யாழ்.மாவட்டச் செயலர் ம. பிரதீபன் பிரதம விருந்தினராகவும், வடமாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் திருமதி லாகினி நிரூபராஷ், யாழ்.மாவட்டச் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி. சுகுணலினி விஜயரத்தினம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், மூத்த கலைஞர்களான வெ. முத்துச்சாமி, மு. ஜெகநாதன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (ச-25,66)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டத்துக்கான எஸ்.பி ஜெய சார்ந்த செல்வா தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது பொலிஸாரின் சீருடைகள் மற்றும் துவிச்சக்கர வண்டி வாகனங்கள் மற்றும் பொலிஸாரின் அலுவலகங்கள் ஆவணங்கள் என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. (ச-25,113)



# மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி வெற்றியீட்டியோருக்கு மதிப்பளிப்பு

கிளிநொச்சி, செப். 12

சமுர்த்தியின் மூன்று தசாப்த கால நினைவை முன்னிட்டு, சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்திய பிரதேசமட்ட அணிகளுக்கிடையிலான மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக அணியினர் சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்து கொண்டனர். இந்த அணியினர் கடந்த செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகத்தினரால் கௌரவிக்கப்பட்டார்கள். (ச-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்கால உரிமைமீறல்கள் பொறுப்புக்கூறல் அவசியம்

## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் சுட்டிக்காட்டு

**கொழும்பு,செப்.12**

**இலங்கையில் போர்க்காலத்தில் இடம்பெற்ற வன்முறைச் செயற்பாடுகளால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்துக்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்று அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் ராஜா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

செம்மணிப் மனிதப்புதைகுழி தொடர்பில் தனது எக்ஸ் தளப்பக்கத்தில் அவர் இவ்வாறு பதிவிட்டுள்ளார்.

செம்மணிப்புதைகுழியில் எலும்புக்கூடுகள், சிறுவர்களின் உடைகள் மற்றும் குழந்தைகளின் பால் போத்தல் உள்ளிட்ட பொருள்கள் மீட்கப்பட்டமை. அங்கு போர்க்காலத்தில் இடம்பெற்ற அட்டூழியங்களை நினைவுபடுத்துகின்றது. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களின் கோரிக்கைக்கு அமைவாக சுயாதீன விசாரணை மற்றும் உண்மையான பொறுப்புக்கூறல் அவசியம். மனிதப்புதைகுழி அகழ்வு தொடர்பில் எமது தொகுதி மக்கள் கரிசனை கொண்டுள்ளனர் என்றும் அவர் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## நோயாளர் கட்டில் விற்பனைக்கு

இரண்டு வாரங்களே பாவித்த தலைப்பகுதி மற்றும் கால் பக்கம் உயர்த்தக்கூடிய பக்கவாட்டு பாதுகாப்புடன் நோயாளர் கட்டில் விற்பனைக்கு உண்டு. மேலதிகமாக TRI - FOLD MATTRESS மற்றும் காற்றுப்படுக்கையுடனான மோட்டாருடன் உள்ளது.

தொடர்பு:- 070 553 3757

(CR/46032) J-1

## முத்தமிழ் கலைஞர் மன்றத்தின் மாபெரும் நாடகத் திருவிழா

*யாழ்ப்பாம், செப்.12*

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில், மாபெரும் நாடகத் திருவிழா மன்றத்தின் தலைவர் இரா.மதிகரன் தலைமையில் பாஷையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டு அரங்கில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் ரகுராமும், சிறப்பு விருந்தினர்களாக மூத்த கலைஞர் கலாபூசணம் பஸ்தியாம்பிள்ளை அல்பிரட், யாழ்.மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.கிருஸ்ணகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மதி மாமா தொகுத்து வழங்கும் "மழலைகளுடன் மகிழ்ந்திருப்போம்" சிறுவர் நாடகம், கலாபூசணம் செபஸ்ரியான்பிள்ளை இராஜேஸ்வரியின் கதை, வசனம், நெறியாள்கையில் "கொல்லி மலைக்குருடன்" இசை நாடகம், அரியாலை கலைமகள் நாடகசபை வழங்கும் கலாபூசணம் இ.கனகரட்ணம் தோன்றி நடிக்கும் "அரிச்சந்திர மயான காண்டம்" இசை நாடகம், அண்ணாவியர் அரியநாயகம் அன்ரூயூலியஸின் நெறியாள்கையில் குருநகர் இளைஞர் கலைக்கழகம் வழங்கும் "கும்பகர்ணன் தென்மோடிக்கூத்து", முத்தமிழ் கலையகத்தின் இளையோர் அணி வழங்கும் "கரோக்கி இசை நிகழ்வு" ஆகியவை அரங்கேற்றப்படவுள்ளன. அத்துடன் இளையோர் இசை அணியும் ஆரம்பிக்கப்படவுள்ளது. (எ-25)



## கோலூன்றிப்பாய்தலில் யாழ்.வீரர்கள் சாதனை

*கொழும்பு, செப்.12*

93 ஆவது தேசிய மட்ட சிரேஷ்ட மட்ட சேர் ஜோன் ராபற் தடகளப் போட்டியில் 20வயது ஆண்கள் பிரிவு கோலூன்றிப்பாய்தலில் ஸ்கந்தவரோதயா கல்லூரி வீரன் ந.டன்ஸ்சன் 4.40 மீற்றர் பாய்ந்து தங்கப்பதக்கத்தையும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி வீரன் ச.கயானன் 4.30 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், மகாஜனக்கல்லூரி வீரன் ச.துசாந்தன் 4.20 மீற்றர் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டனர். இந்தப் போட்டிகள் கொழும்பு தியகம சர்வதேச விளையாட்டரங்கில் இரண்டாம் நாள் நிகழ்வாக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. (ச-25)

### தேசியமட்ட கோலூன்றிப்பாய்தல்

## வெள்ளிப்பதக்கம் வென்ற ஸ்கந்தவரோதய மாணவன்



கொழும்பு, செப்.12

93 ஆவது தேசியமட்ட சிரேஷ்ட சேர் ஜோன் டாபர்ட் தடகளப் போட்டிகளின் வரிசையில், 18 வயது ஆண்கள் பிரிவு கோலூன்றிபாய்தலில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் நி.நிதன்றாஜ் வெள்ளிப் பதக்கத்தை தனதாக்கினார். இவர் 3.90 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடம்பெற்றார். குறித்த போட்டி கொழும்பு தியகம மகிந்தராஜபக்ஷ விளையாட்டரங்கில் மூன்றாம் நாள் நிகழ்வாக கடந்த புதன்கிழமை நடைபெற்றது. (ச-25)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 . 07 . 1957

மறைவு 23 . 08 . 2024

அமரர் நாகரத்தினம் தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர்)

திதி: ஆவணி தேய்பிறை பஞ்சமி

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - இன்று
தெய்வமாகிவிட்ட எம் இதயத்தின் அணையாஜோதியே எங்கள் அப்பா !
நீங்கள் இன்றி ஆண்டொன்று எமக்கு யுகங்கள் ஆகின
நொடிக்கு ஒரு தடவை உங்கள் புன்னகை பூத்த முகம் காணத்
துடியாய்த் துடிக்கின்றோம்.
எம் வாழ்வுக்கு அர்த்தம் தந்தவரே...!
நாம் எல்லாம் உம் பேரிழப்பால் நிலை தளர்ந்தோம்
எம் நினைவிலிருந்து காலத்தாலும் பிரிக்க முடியாத
திரவியப் பொக்கிஷம் நீரே !
மீண்டும் உம்மை எப்போது காண்போம் !
உங்கள் ஆத்மா குருநாதரின் பாதார விந்தங்களில்
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்

(CS/59376) J-1

Mora Exam — Faculty of Engineering University of Moratuwa

மொறட்டுவைப் பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்கள் நடாத்தும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான 16 வது

## முன்னோடி பரீட்சை 2025

மொறட்டுவை பல்கலைக்கழக பொறியியற் பீட தமிழ் மாணவர்களால் க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வருடாந்த முன்னோடிப் பரீட்சை இம்முறையும் சிறப்பாக இடம்பெறவுள்ளது. தமிழ், ஆங்கில மொழிகளில் கணித மற்றும் உயிரியல் பிரிவுகளில் பரீட்சைகள் இடம்பெறவுள்ளன. கடந்த 15 வருடங்களாக நடைபெற்று வரும் இந்தப் பரீட்சையில் தோற்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை வருடாவருடம் அதிகரித்துள்ளது. விடைத்தாள்கள் யாவும் சிறந்த முறையில் திருத்தப்பட்டு Z-புள்ளிகள் மாவட்ட, தேசிய நிலைகளூடான பெறுபேறுகள் 18.10.2025 க்கு முன்னர் வெளியிடப்படும். மாணவர்களுக்கு இறுதிப் பரீட்சை தொடர்பான அனுபவத்தை வழங்கி அவர்களின் நிலையை அறிந்து கொள்வதே இப்பரீட்சையின் நோக்கமாகும். கடந்த வருடங்களில் இப்பரீட்சையில் முன்னணி பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டவர்கள் இறுதிப் பரீட்சையிலும் முன்னணி நிலைகளை அடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

| DATE | TIME | SUBJECT |
|---|---|---|
| 20/09/2025 Saturday | 1.30 P.M - 4.40 P.M | Combined Mathematics I |
| | 1.30 P.M - 3.30 P.M | Biology I |
| 21/09/2025 Sunday | 1.30 P.M - 4.40 P.M | Combined Mathematics II |
| | 1.30 P.M - 4.40 P.M | Biology II |
| 27/09/2025 Saturday | 1.30 P.M - 3.30 P.M | Physics I |
| 28/09/2025 Sunday | 1.30 P.M - 4.40 P.M | Physics II |
| 04/10/2025 Saturday | 1.30 P.M - 3.30 P.M | Chemistry I |
| | 1.30 P.M - 3.30 P.M | ICT I |
| 05/10/2025 Sunday | 1.30 P.M - 4.40 P.M | Chemistry II |
| | 1.30 P.M - 4.40 P.M | ICT II |

Online Application form

*For more details :*

070 589 1710

077 892 7391

examsmora@gmail.com

www.moraexams.org

Media Sponsor உதயன்

பரீட்சைக் குழு
MORA EXAMS - 2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் விநியோகம் வடக்கில் ஆரம்பம்

*யாழ்ப்பாணம், செப்.12*

தபால் ஊழியர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டத்தால் கொழும்பில் தேங்கியிருந்த வடக்குக்கான தபால் பொதிகள் தற்போது எடுத்துவரப்பட்டுள்ளன.

எடுத்துவரப்பட்ட தபால்கள் அந்தந்த பிரதேச பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-25, 17)

## சீனத்...

யுள்ளார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் மஹிந்த ராஜபக்ச தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றையும் மேற்கொண்டுள்ளார்.

'விஜேராமவிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து நான் புறப்படுவதற்கு முன்னர், இலங்கைக்கான சீனத் தூதுவரைச் சந்தித்துக் கலந்துரையாடியதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவரது வருகைக்கு நான் நன்றி தெரிவிப்பதுடன், எமது நாடுகளுக்கு இடையிலான இராஜதந்திர மற்றும் தனிப்பட்ட உறவு ரீதியான நீடித்த நட்புறவை நான் அன்புடன் நினைவு கூருகிறேன்' என்றவாறாக அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ-ம-44)

## கஞ்சா...

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் போதைத் தடுப்புப் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-27)

## அரசமாளிகையில்...

தான் தங்கியிருந்த அரச மாளிகையில் இருந்து மைத்திரி வெளியேறிவிட்டார் என பிறிதொரு தரப்புத் தகவல்களும் வெளிவந்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இன்னும் வெளியேறவில்லை. அரச மதிப்பீட்டுக்கமைய வீட்டுப் பெறுமதிக்குரிய வாடகையைச் செலுத்திவிட்டு சிறிது காலம் அங்கு சந்திரிக்கா அம்மையார் தங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## ஹெரோய்னுடன்...

அத்தியட்சகரின் கீழ் இயங்கும், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், சுன்னாகம் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## ஈஸ்டர்...

வதாகக் குறிப்பிட்டுக்கொண்டு ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான உண்மைகளை மறைப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

ஆளும் தரப்பினர் உறுப்பினர்கள் தமது பெரும்பான்மையை பயன்படுத்திக் கொண்டு எதிர்க்கட்சியினர் மீது பாரதூரமான குற்றச்சாட்டுகளை அர்த்தமற்ற வகையில் முன்வைக்கிறார்கள். சேறு பூசுகிறார்கள். நாடாளுமன்றத்தின் ஹன்சார்ட் பதிவுகளை ஆராய்ந்தால் இதனை விளங்கிக் கொள்ளலாம்.

உயிர்த்தஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவின் பெயர் சந்தேக நபராக குறிப்பிடப்பட்டுள்ளதால் தான் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தோம். கத்தோலிக்க திருச்சபை இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்றுக்கொண்டுள்ளது.

நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொண்டால் பல விடயங்கள் வெளிவரும் என்று அரசாங்கம் அச்சமடைந்துள்ளது. உண்மைவெளிவருவதைஅரசாங்கம் விரும்பவில்லை. ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணைகள் உரிய வகையில் இடம்பெறவில்லை. விரைவில் புதிய பாப்பரசரைச் சந்தித்து இந்த விடயம் தொடர்பில் வெளிப்படுத்துவோம் - என்றார். (அ-ம)

## நம்பிக்கையில்லாப்...

மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது.

இதன்போது பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதத்துக்கு எடுக்காமல் நிராகரித்தமைக்குக் காரணமாகக் கூறப்படும் சட்டமா அதிபரின் அறிக்கை மற்றும் நாடாளுமன்ற செயலாளரின் அறிக்கை என்பவற்றை சபையில் சமர்ப்பிக்குமாறு எதிரணி பிரதம கொறடா கஜந்த கருணாதிலக்க வலியுறுத்தினார்.

அதற்கு சபாநாயகர், 'சட்டமா அதிபரின் அறிக்கை மற்றும் நாடாளுமன்ற செயலாளரின் 'அறிக்கையைப் பரிசீலனை செய்துவிட்டே, நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் எனது நிலைப்பாட்டை அறிவித்தேன்' என்று பதிலளித்தார்.

அதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, 'அரசியலமைப்பின் உறுப்புரைக்கமைய பிரதி அமைச்சர் நிறைவேற்று அதிகாரத்தின் ஒரு பகுதியாகும். அதனால்தான் சில சந்தர்ப்பங்களில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சபையில் இருக்கும்போதே பிரதி அமைச்சர் கேள்விகளுக்கு பதிலளிக்கிறார். எனவே, அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்' எனக் குறிப்பிட்டார். அஜித் பி பெரேரா, முஜிபுர் ரஹ்மான், தயாசிறி ஜயசேகர உட்பட ஏனைய எதிரணி உறுப்பினர்களும் இதன்போது கருத்துகளை முன்வைத்தனர்.

இவர்களின் கருத்துகளை அடுத்து சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க கருத்து வெளியிட்டார்.

'பிரதி அமைச்சர் ஒருவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரமுடியாது என நான் ஆரம்பத்திலேயே தெரிவித்திருந்தேன்' என அவர் கூறுகையில் எதிரணி உறுப்பினர்கள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

அமைச்சர் பிமல் ரத்நாயக்க தொடர்ந்து உரையாற்று முற்பட்டபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் சபைக்கு நடுவில் வந்து சபாபீடத்துக்கு முன் நின்று, சட்டமா அதிபரின் அறிக்கை மற்றும் நாடாளுமன்றச் செயலாளரின் பணியாற்றொகுதியின் அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்குமாறு வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். இதனால் சபையில் கடும் கூச்சல் ஏற்பட்டது. படைகல சேவிதர்கள், செங்கோலை பாதுகாத்துக்கொண்டனர். எதிரணி உறுப்பினர்கள் கட்டுக்கடங்காததால் சபை நடவடிக்கையை 10 நிமிடங் களுக்கு ஒத்திவைப்பதாகத் தெரிவித்து, சபை நடவடிக்கைகளை மு.ப. 9.50 மணிக்கு ஒத்திவைத்தார். பின்னர் நாடாளுமன்றம் மீண்டும் 10.05 மணிக்குக் கூடியது. இதன்போது சபாநாயகர், இந்த விடயங்களை கட்சித் தலைவர்கள் கூடி தீர்த்துக்கொள்வோம் எனத் தெரிவித்து சபை நடவடிக்கையை முன்னெடுக்க முற்பட்டார். பின்னர் ஒருவாறு சர்ச்சை முடிவுக்குவந்தது. (அ-ம-44)

## பிக்குவுக்குச்...

கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தக் கோரிக்கை தொடர்பில் முதல்வர் காண்டீபன் தெரிவித்ததாவது:-

சிலைகள் அமைப்பது தொடர்பாக முழுமையான தீர்மானத்தின் ஊடாகவே நடைமுறைகளை மேற்கொள்ள முடியும். சபை அங்கீகரித்து ஆளுநர் வரையில் அந்த விடயம் செல்ல வேண்டும். எனவே, சமூகங்களுக்கு இடையில் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டாம். எம்.ஜி.ஆருக்கு சிலை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்த முயற்சி தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. எனவே, சிலை அமைப்பது தொடர்பான கோரிக்கைகளை முன்வைப்போர், முழுமையான தகவல்களை வழங்கி அவற்றை முறைப்படி சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் - என்றார். (அ-ம-110)

## வாள்வெட்டுத்...

னர். இதையடுத்து, அந்தக் குடும்பத் தலைவர் மீட்கப்பட்டு தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பலாலிப் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-27)

## 9/11 தாக்குதல்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி என்பது, உலகில் பலம் பொருந்திய நாட்டுக்கும் பயங்கரவாதத்தின் அச்சம் தென்பட்ட நாளாகும். செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதிதான் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டன. பயங்கரவாதத்தின் கோர முகம் வெளிப்பட்ட நாளில்தான், பயங்கரவாதிகளிடம் இருந்து இலங்கையை பாதுகாத்த தலைவர் கொழும்பிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஓய்வுபெற்ற பின்னர் அவருக்கு விஜேராம மாளிகையை வழங்குமாறு நான் பரிந்துரைக்கின்றேன். மஹிந்த ராஜபக்ச அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதில்லை. தங்காலையில் இருந்துதான் அவரது பயணம் ஆரம்பமானது. எனவே, அங்கிருந்து புதிய பயணம்கூட ஆரம்பமாகலாம். அநுரவின் அரசியல் அழுத்தங்களுக்கு நாம் அஞ்சவில்லை. மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் மட்டுமல்ல அதற்கு மேல் இருந்தாலும் அரசியல் அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணியப் போவதில்லை - என்றார். (அ-ம-44)

## அரச...

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்தே அவர் தனது அரச வதிவிடத்தில் இருந்து வெளியேறியுள்ளார்.

கொழும்பு, விஜேராம மாவத்தையில் மஹிந்த தங்கியிருந்த அரச மாளிகை வளாகம் நேற்றுக் காலை முதல் மிகவும் பரபரப்பாக காணப்பட்டது. பொதுஜன பெரமுன உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், மஹிந்தவின் விசுவாசிகள் என பலரும் அங்கு குவிந்த வண்ணம் இருந்தனர். இவ்வாறான சந்திப்புகளைத் தொடர்ந்து, தனது மனைவி சிராந்தி ராஜபக்சவுடன் தங்காலை கால்டன் இல்லம் நோக்கி மஹிந்த புறப்பட்டார்.

மஹிந்தவை வழியனுப்ப பலர் காத்திருந்தனர். 'போரை முடித்த தலைவன் வாழ்க', 'நாட்டை மீட்டெடுத்த மன்னன் வாழ்க' என்றெல்லாம் கோஷங்கள் எழுப்பட்டன. இடையிடையே புலிப்புராணமும் ஓதப்பட்டது. பின்னர் தங்காலை நகருக்குச் சென்ற மஹிந்தவை வரவேற்பதற்கு பெருமளவானோர் ஒன்றுகூடி இருந்தனர். அங்கிருந்து கால்டன் இல்லத்துக்கு மஹிந்த அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு சமய வழிபாடு இடம்பெற்றது. மஹிந்தவைச் சந்திப்பதற்கு மக்களும் வருகை தந்திருந்தனர்.

அதேவேளை, மஹிந்த ராஜபக்சவுக்கு கொழும்பில் வீடு வழங்குவதற்கு சிலர் முன்வந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இடம் பெற்றுவரும் வாராந்த சுக்கிர வாரக் கந்தபுராணத்தொடர் சொற்பொழிவிலிருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு வெற்றிபெற்ற மாணவர்களுக்குஆலய பிரதம குருக்களால் பரிசில்கள் வழங்கிவைக்கபட்டன. (ச-25,17)

# ‘தெவனி எச 2025’ வர்த்தகக் கண்காட்சி

கொழும்பு, செப்.12

காட்சி ஊடகத்துறையில் ஈடுபட்டுள்ள தொழில் வல்லுநர்கள், பாவனையாளர்கள் மற்றும் தொழில்முனைவோருக்காக வருடாந்தம் நடத்தப்படும் ‘ தெவனி எச 2025’ வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 13, 14 ஆம் திகதிகளில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு நினைவு மண்டபத்தில் காலை 10 மணி தொடக்கம் இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளது. புகைப்படம், வீடியோ, சைன், அச்சிடுதல், விளம்பரம் போன்ற 5 பிரிவுகளின் கீழ் குறித்த கண்காட்சி நடத்தப்படவுள்ளது. அத்துடன் நவீன கருவிகள், உதிரிப் பாகங்கள் மற்றும் சேவைகளை இலங்கை வர்த்தகர்களுக்கு அறிமுகப்படுத்துதல் இந்தக் கண்காட்சியின் பிரதான நோக்கமாகும். துறைசார் தொழில்புரிவோர் மற்றும் புதியவர்களுக்கும், மாணவர்களுக்கும் தேவைப்படும் வகையில், துறைசார் நிபுணர்கள் மூலம் விரிவுரைகள், பட்டறைகள் மற்றும் செயன்முறைகள் நடத்தப்படும். மேலதிக விவரங்களுக்கு 077 306 3566 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

# புத்தாக்கங்களின் சங்கமம் ‘ஸ்பேஸ் பெஸ்ட்’ கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.12

SLIIT NORTHERN UNI பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் விண்வெளி விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களுடன் கூடிய ‘SpaceFest -2025’ கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி நடைபெறவுள்ளது. கந்தர்மடம் சந்தியிலுள்ள பல்கலைக்கழகத்தின் முதலாம் வளாகத்திலும் மற்றும் பலாலி வீதி டம்ரோவுக்கு அருகிலுள்ள 2 ஆம் வளாகத்திலும் கண்காட்சி நடைபெறவுள்ளது. பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிடலாம்.

வடமாகாணத்தினைச் சேர்ந்த 250 க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவக்குழுக்களின் சுவரொட்டிக் கண்காட்சி, nternet of Things கண்காட்சி, மெய்நிகர் உண்மை அமர்வுகள், Aeronautical கருத்தமர்வுகளும் கண்காட்சியும், மாணவர்களுக்கான புத்தாக்க விளையாட்டுகள், விண்வெளி வினாவிடை போன்ற பல விடயங்கள் கண்காட்சியை மெருகூட்டவுள்ளன. (ச-25)

**காணி விற்பனை**

சித்தன் கேணியில் 2 3/4 பரப்பு வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்பு: 077 618 0644

(CS 59357) E

**காணி விற்பனைக்கு**

மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு

தொடர்பு: 077 794 8012

**காணி விற்பனைக்கு**

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முன் உள்ள பொற்பதி வீதியில் 4 1/2 பரப்புக் காணி வீதி முகப்புடன் சேர்ந்த நிலையில் நல்ல தண்ணி கிணறு, இருபக்க பாதையுடன் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 075 945 3391

(CS 59978) E

**மணமகன் தேவை**

சுவிற்சர்லாந்தில் பிறந்து வங்கியில் பணிபுரியும் 2000 ஆண்டு பிறந்த விசாக நட்சத்திர (உயர்குலம்) மணமகளிற்கு மணமகன் தேவை

சுவிற்சர்லாந்து அல்லது ஐரோப்பா, கனடா, அவுஸ்ரேலியாவில் வசிப்பவர்கள் மட்டும்

WhatsApp குறுந்தகவல் ஊடாக மட்டும் தொடர்புகொள்வதுடன் மணமகனின் குறிப்பு விபரங்களை அனுப்பிவைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

WhatsApp இலக்கம்
+41 76 813 37 65

(CS 59259) E

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மானிப்பாயில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

நிலப்பரப்பு

- மானிப்பாய் பிரதான வீதியில் இருந்து 2 வது காணி.
- மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இருந்து 600m தூரத்தில் அமைந்துள்ளது.
- 20 அடி பாதையுடன்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று சூழல்.
- ஒரு பரப்பின் விலை 55 லட்சம் ரூபாய்.

பார்வையிடும் நேரம் : காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தொடர்புகளுக்கு :-

ஜெயம்
077 814 7389
077 986 5457

(CS/3994) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org